**12.01.2020**

**பத்திரிக்கை செய்தி**

**அரசு பொது விடுமுறை நாட்களான ஜனவரி 15,16,17 ஆகிய நாட்களில் மெட்ரோ இரயில் பயணச் சீட்டுகளில் 50 சதவீத கட்டணத் தள்ளுபடி.**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பொது மக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் வசதிக்காக அனைத்து ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் (பயண அட்டை மற்றும் வரம்பற்ற பயண அட்டையை தவிர) மெட்ரோ இரயில் பயணச் சீட்டுகளில் தற்போதுள்ள 50% கட்டண தள்ளுபடியை அளித்துள்ளது. இது 2020-இன் அரசு பொது விடுமுறை நாட்களுக்கும் பொருந்தும். அதன்படி 15.01.2020, 16.01.2020 மற்றும் 17.01.2020 வரையிலான பொங்கல் அரசு விடுமுறை நாட்களிலும் இச்சலுகை வழங்கப்படுகிறது.

மேலும் காணும் பொங்கல் தினமான 17.01.2020 அன்று அரசினர் தோட்டம் மற்றும் ஏஜி.டிஎம்எஸ் மெட்ரோ இரயில் நிலையங்களில் இருந்து மெரினா கடற்கரைக்கு பொதுமக்கள் சென்று வர வசதியாக காலை முதல் இரவு வரை மெட்ரோ சீருந்து இணைப்பு சேவைகள் இயக்கப்படவுள்ளன.பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இந்த வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கேட்டுக் கொள்கிறது.